


# ஃபிளிப்கார்ட் மற்றும் மிந்த்ரா நிலைத்தன்மை முயற்சிகளை மேம்படுத்தவும் காடுகளை பாதுகாக்கவும் கனோபியுடன் கைகோர்த்துள்ளன

- கேனோபியின் பேக்4குட் (பேக்கேஜிங்கிற்கானது) மற்றும் கனோபிஸ்டைல் (ஃபேஷனுக்கானது) முன்முயற்சிகளில் இணைந்துள்ளது
- பேக்கேஜிங், காகிதம் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட செல்லுலோசிக் இழைகளின் பயன்பாட்டில் புராதன மற்றும் அழியும் நிலையில் இருக்கும் காடுகளிலிருந்து பெறப்பட்ட பொருட்களின் பயன்பாட்டை அகற்றுவதற்கான அணுகுமுறைகள் மற்றும் அமைப்புகளை ஆதரிக்கிறது.

**பெங்களூரு மற்றும் வான்கூவர் - ஜூலை 22, 2021:** இந்தியாவின் உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையான ஃபிளிப்கார்ட் மற்றும் இந்தியாவின் முன்னணி ஃபேஷன் மற்றும் வாழ்க்கை முறை சேருமிடம் மிந்த்ரா உள்ளிட்ட இந்தியாவின் உள்நாட்டு நுகர்வோர் இணைய சசூழல் அமைப்பான ஃபிளிப்கார்ட் குழுமம், நிலையான பேக்கேஜிங் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட செல்லுலோசிக் இழைகளுக்கான உறுதிப்பாட்டிற்காக லாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பு கனோபியுடன் கைகோர்த்துள்ளது.

காலநிலை ஸ்திரத்தன்மையை பராமரிப்பதிலும், பல்லுயிரியியலைப் பாதுகாப்பதிலும், பழங்குடி சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் உலகின் காடுகளின் பங்கை ஃபிளிப்கார்ட் மற்றும் மிந்த்ரா புரிந்துகொண்டுள்ளன. நிறுவனங்கள் நிலையான பேக்கேஜிங் மற்றும் வள ஆதாரங்களை நோக்கி நகர்வதற்கான நிலையான உறுதிப்பாட்டை விரிவுபடுத்துவதற்காக கேனோபியின் பேக்4குட் மற்றும் கனோபிஸ்டைல் முயற்சிகளில் இணைந்துள்ளன. சமீபத்தில், அவர்கள் தங்கள் பேக்கேஜிங்கில் ஒற்றை-பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு நட்பார்ந்த காகிதத் துண்டுகள், பாலி பைகளை மறுசுழற்சி செய்யப்பட்ட காகித பைகளையும், குமிழி மறைப்புகளுக்கு பதிலாக அட்டைப்பெட்டி துண்டாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் மற்றும் 2 பிளை ரோல் போன்ற பலவற்றை அறிமுகம் செய்துள்ளது.

கனோபியின் பேக்4 குட் (பேக்கேஜிங்) மற்றும் கேனோபிஸ்டைல் (பேஷன்) முயற்சிகளில் இணைந்துள்ள, இரண்டு ஃபிளிப்கார்ட் குழும நிறுவனங்களும் காடுகளிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளின் நிலையான ஆதாரத்தையும், மூலப்பொருட்களுக்கான காடுகளிலிருந்து மாறுவதற்கு பைலட் மாற்று அடுத்த தலைமுறை தீர்வுகளையும் நோக்கி நகரும். இந்த உறுதிப்பாட்டிற்காக, ஃபிளிப்கார்ட் மற்றும் மிந்த்ரா அடுத்த மூன்று ஆண்டுகளில் பின்வரும் செயல்பாடுகளில் கவனம் செலுத்தும்:

- நெளி காகிதம் மற்றும் காகித அட்டை பயன்பாட்டைக் குறைக்க மீண்டும்பயன்படுத்தக்கூடிய / மீண்டும் நிரப்பக்கூடிய ஷிப்பிங் பாக்ஸ்களை உருவாக்குதல் மற்றும் வடிவமைத்தலை ஆராயவுள்ளது.
- மறுசுழற்சி செய்யப்பட்ட, மறுபயன்பாட்டுக்குரிய மற்றும் / அல்லது FSC சான்றளிக்கப்பட்ட காகிதம் மற்றும் பேக்கேஜிங் மற்றும் நிலைத்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டு மனிதனால் உருவாக்கப்பட்ட செல்லுலோசிக் இழைகளுடனான தயாரிப்புகளை ஊக்குவித்தல்

- பேக்கேஜிங் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கும் மின்-வர்த்தக, ஷிப்பிங், டிஸ்ப்ளே மற்றும் ராப்பிங் அமைப்புகளை வடிவமைத்து செயல்படுத்துதல்
- பேக்கேஜிங்கில் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்தல்
- உள்வணிக பயன்பாடுகளுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடிய பேக்கேஜிங் அமைப்புகளைப் பயன்படுத்துதல்
- டிஜிட்டல் தொடர்பு, சந்தைப்படுத்தல் மற்றும் கணக்கியல் அமைப்புகளின் பயன்பாட்டை அதிகரித்தல்
- வளர்ந்து வரும் மற்றும் வட்ட பொருளாதார கண்டுபிடிப்புகளை ஆராய்தல் மற்றும் பயன்படுத்துதல் உள்ளிட்ட சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல்
- ரேயான் / விஸ்கோஸ், லியோசெல் மற்றும் மோடல் உள்ளிட்ட உள்ளமை தயாரிப்புகளுக்கு நிலைத்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டு மனிதனால் உருவாக்கப்பட்ட செல்லுலோசிக் ஃபைபர் பயன்பாட்டை அதிகரித்தல்

"நெக்ஸ்ட் ஜென் பேக்கேஜிங் மற்றும் ஆடை உற்பத்தியில் உலகளாவிய தலைத்துவ நிலையில் வீற்றிருக்கும் வகையில் இந்தியா சிறந்த சசாத்தியத்திறனைக் கொண்டுள்ளது, மேலும் ஃபிளிப்கார்ட் மற்றும் மிந்த்ரா டர்போவுடனான இந்த கூட்டு இக்காலநிலை சேமிப்பு தீர்வுகளை ஒரு அர்த்தமுள்ள காலவரிசையில் அளவிட முயற்சிக்கிறது" என்று **கனோபியின் நிர்வாக இயக்குனர் நிக்கோல் ரைக்ரோஃப்ட்** அவர்கள் கூறினார். மேலும் அவர், "ஃபிளிப்கார்ட் குழுமத்தின் தலைமையை நாங்கள் பாராட்டுகிறோம், இந்த லட்சிய இலக்குகளை அடைய அவர்களுடன் இணைந்து செயலாற்றுவதை நாங்கள் ஆவலோடு எதிர்நோக்குகிறோம்'' என்றும் கூறினார்.

**ஃபிளிப்கார்ட்டின் மூத்த துணைத் தலைவரும் வினியோகச் சங்கிலியின் தலைவருமான ஹேமந்த் பத்ரி** அவர்கள், ''உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையாக ஃபிளிப்கார்ட் வணிகத் தேவைகளுக்கு நிலையான மாற்றுகளை உருவாக்கும் அதே வேளையில் பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்வதன் மூலம் நிலையான சூழலை உருவாக்குவதில் உறுதியாக உள்ளது. இந்த முயற்சியில், உலகின் புராதான மற்றும் அழியும் நிலையில் இருக்கும் காடுகளை காப்பாற்றுவதற்காக, கேனோபிஸ்டைல் மற்றும் பேக்4குட் முயற்சிகள் இரண்டிலும் சேருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பேக்கேஜிங் செய்வதற்கான புதிய வளப்போக்கினைத் துவக்க அனுமதிக்கும் ஒரு நெருக்கமான கூட்டாண்மையை நாங்கள் எதிர்நோக்குகிறோம், மேலும் பிற முக்கிய செயல்பாட்டு பகுதிகளான லாஜிஸ்டிக்ஸ், உள்கட்டமைப்பு, எரிசக்தி திறன் மற்றும் பலவற்றில் நீடித்தல் முயற்சிகளில் இவை மாற்றத்தைத் தூண்டும்'' என்று கூறினார்.

**மிந்த்ராவின் துணைத் தலைவரும், வளங்களின் தலைவருமான நீது ஜோட்வானி** அவர்கள், ''மிந்த்ரா நிலைத்தன்மைக்கு உறுதியளித்துள்ளது, மேலும் கார்பன் தடம் குறைக்கும் தொழில்துறையின் முன்னோடித்துவ முயற்சிகளில் எப்போதும் முன்னணியில் உள்ளது, அதே நேரத்தில் முழு விநியோகச் சங்கிலி மற்றும் உற்பத்தி செயல்முறைகளிலும் சூழலுக்கு நட்பார்ந்த தன்மையை ஊக்குவிக்கும் வகையில் மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கிறது. கனோபி உடனான இந்த தொடர்பும், பேஷன் மற்றும் பேக்4குட் பேக்கேஜிங்கிற்கான கனோபிஸ்டைலை ஏற்றுக்கொள்வதும் ஒற்றை பிளாஸ்டிக் பயன்பாட்டை மேலும் நீக்குவதற்கும் சுற்றுச்சூழலுக்கு நட்பார்ந்த நடைமுறைகளை அதிகரிப்பதற்குமான எங்கள் இலக்கை நோக்கிய ஒரு முக்கிய படியாகும்'' என்று கூறினார்

பொறுப்பான வனவியல் மற்றும் உலகின் புராதானமான மற்றும் அழியும் நிலையிலுள்ள காடுகளிலிருந்து எந்த வளமும் எடுக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவது நிலைத்தன்மைக்கு ஒரு முக்கியமான படியாகும், மேலும் இந்த கொள்கை ஃபிளிப்கார்ட் குழுமத்தின் பணிக்கு வெற்றிகரமாக உதவும். கனோபியின் ஆதரவுடன், இது விநியோகச் சங்கிலிகளை உயிர்வாழ்தலை உறுதிப்படுத்தும் மதிப்பு சங்கிலிகளாக மாற்றும்.

**ஊடகத் தொடர்பிற்கு:**

**கனோபி தொடர்பிற்கு**
மைக் ஹுடமா
*+1 778-989-6153*
*communications@canopyplanet.org*

**ஃபிளிப்கார்ட் தொடர்பிற்கு**
*Media@flipkart.com*

**கனோபி குறித்து**
கனோபி என்பது லாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பாகும், இது காடுகள், உயிரினங்கள் மற்றும் காலநிலையைப் பாதுகாக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நீடித்த விநியோகச் சங்கிலிகளை மாற்றும், புதுமையான தீர்வுகளைத் தூண்டும் மற்றும் நமது உலகின் மீதமுள்ள புராதானமான மற்றும் அழியும் நிலையிலுள்ள காடுகளைப் பாதுகாக்கும் அதிநவீன சுற்றுச்சூழல் கொள்கைகளை உருவாக்க கனோபி 750 க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றிவருகிறது. மேலும் அறிக: www.canopyplanet.org

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து**
இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் இந்தியாவின் முன்னணி பேமெண்ட்ஸ் ஆப்ஸ்களில் ஒன்றாக ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களின் முதன்மை பங்குதாரராகவுள்ளது.

*2007 – ம் ஆண்டு துவக்கப்பட்ட ஃபிளிப்கார்ட், பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 350 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்த வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் சேவையாற்றுகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.*